# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051864

1. District மாவட்டம்: விழுப்புரம் PS காவல்நிலையம்: ஊ த க பிரிவு Year ஆண்டு: 2023 FIR No. மு.த.அ. எண்: 02/23 Date நாள்: 23.06.2023

2. (i) Act சட்டம்: Pc Act 1988 as amended Sections பிரிவுகள்: 7 of PC (Amendment)
(ii) Act சட்டம்: by PC Act (Amendment) Sections பிரிவுகள்: Act 2018
(iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் Date to நாள் வரை: 22.06.2023 காலை 11.30 மணி
Time Period நேர அளவு Time from நேரம் முதல் Time to நேரம் வரை
(b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம்: 22.06.2023 17.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம்: 23.06.2023 காலை 07.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: வடமேற்கில் சுமார் 37 கி.மீ
Beat Number முறைக் காவல் எண் (b) Address : முகவரி: உதவி மின் செயற்பொறியாளர் அலுவலகம் (தெற்கு) செஞ்சி (தெற்கு)
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: சீ. அரவிந்தன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: ஏ. சீனிவாசன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம்: இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்: விவசாயம் (g) Address : முகவரி: நெ. 3/376, கிழக்கு தெரு, பொன்னங்குப்பம் கிராமம் & அஞ்சல், செஞ்சி TK, விழுப்புரம் Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ஜெகன்மோகன், உதவி மின் செயற்பொறியாளர், உதவி மின் செயற்பொறியாளர் அலுவலகம் (தெற்கு), செஞ்சி (தெற்கு), செஞ்சி வட்டம் விழுப்புரம் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. அய்யா, நான் இன்று 22.06.2023ந் தேதி சுமார் 17.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது வாதி திரு.சீ.அரவிந்தன், என்பவர் கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை பெற்று பின்னர் ரகசிய விசாரணை செய்து இன்று 23.06.2023, காலை 07.00 மணிக்கு விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 02/2023/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர், திரு.சீ.அரவிந்தன், வயது-47/2023 த/பெ ஏ.சீனுவாசன், நெ.3/376, கிழக்கு தெரு, பொன்னங்குப்பம் கிராமம் & அஞ்சல், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம் அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். எனது தந்தை திரு.ஏ.சீனுவாசன் அவர்களுக்கு சொந்தமாக எங்களது ஊரான பொன்னங்குப்பம் கிராமத்தில் பட்டா எண். 100-ல் புல எண்கள். 12/2B, 5/3A2, 5/3A4, 5/5A2 5/5A3, 5/5A4, 5/5A5, 5/5A6, 5/5A7 மற்றும் 5/3 ஆகியவற்றில் மொத்தம் 4 ஏக்கர் 12.1/2 செண்ட் நிலமும், பட்டா எண்.818-ல் புல எண்கள். 5/3A1 மற்றும் 5/3A3 ஆகியவற்றில் மொத்தம் 59 செண்ட் நிலமும் உள்ளது. புல எண்.5/3A3-ல் கருங்கல் கட்டுக்கிணறும் அதனுள் 5HP மின் மோட்டாரும் பொருத்தப்பட்டுள்ளது. அந்த கிணற்றில் விவசாயப்பணிக்கு தேவையான நீர் கிடைக்கப்பெறாததால் அதன் பக்கத்தில் இருக்கும் புல எண்.5/3A1-ல் உள்ள நிலத்தில் விவசாய தேவைக்காக ஆழ்துளை கிணறு போட்டுள்ளோம்.

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

So Aravindan 23.6.23.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
23/06/2023

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.06.2023 at 07.30 hrs.

Name: பெயர் ந.ரி.ஸ்வரி.........
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு,
விழுப்புரம்.

அந்த ஆழ்துளை கிணற்றில் 5HP மோட்டார் பொருத்தி அதிலிருந்து வரும் நீரை அருகில் உள்ள கிணற்றில் விட்டு, கிணற்றிலிருந்து மறுபடியும் பாசனத்திற்கு பயன்படுத்த திட்டமிட்டோம். அதற்காக எனது தந்தை, கிராம நிர்வாக அலுவலரின் சான்று பெற்று கருங்கல் கிணற்றில் உள்ள மோட்டாருக்காக வாங்கப்பட்ட அதே சர்வீசிலிருந்து ஆழ்துளை கிணற்றுக்கான மோட்டாருக்கும் மின்சாரத்தை பயன்படுத்த சேஞ்சு ஒயர் சுவிட்ச் வைக்க அனுமதி கேட்டு 20.06.2023-ம் தேதியில் உதவி மின் செயற்பொறியாளர், மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், செஞ்சி (தெற்கு), விழுப்புரம் மாவட்டம் அவர்களிடம் எனது தந்தை மனு கொடுத்தார். இந்த மனு சம்மந்தமாக என் தந்தை என்னை EB ஆபீசுக்கு நேரில் சென்று அவரது சார்பாக விசாரித்து வரும்படி சொன்னார். அதனால் நான் 21.06.2023-ம் தேதி அன்று காலையில் செஞ்சி (தெற்கு), உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு இருந்த உதவி மின் செயற்பொறியாளர் அவர்களிடம் எனது தந்தை கொடுத்த மனு சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் உனது தந்தை கொடுத்த மனுவுக்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றால் எனக்கு ரூபாய் 10,000/- கொடுத்தால்தான் சேஞ்சு ஒயர் சுவிட்ச் அமைக்க நடவடிக்கை எடுப்பேன், இல்லை என்றால் இதோ என்னிடம் இருக்கும் உனது தந்தையின் மனு இப்படியே கிடப்பில் தான் இருக்கும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் எதற்கு சார் இந்த பணம் இது அரசு கட்டணமா இந்த பணத்துக்கு ரசீது கொடுப்பீர்களா என கேட்டேன். அதற்கு அவர் இல்லை இந்த பணம் எனக்குதான் பணம் கொடுத்தால்தான் வேலை நடக்கும் என்று கூறினார். அவர் சொன்னதை கேட்டு, நான் எனது வீட்டிற்கு சென்று தந்தையிடம் நடந்ததை சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. வேண்டும் என்றால் இன்னொரு முறை EB ஆபீசுக்கு சென்று என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்ற விபரத்தை சொல்லி கேட்டு பார் என்று சொன்னார். அதன்படி நான் 22.06.2023-ம் தேதி காலையில் சுமார் 11.30 மணியளவில் மீண்டும் EB ஆபீசுக்கு சென்று அங்கு பணியில் இருந்த உதவி மின் செயற்பொறியாளர் திரு.ஜெகன்மோகன் அவர்களை பார்த்து நீங்கள் கேட்ட பணம் அதிகமாக உள்ளது அவ்வளவு பணத்தை எனது தந்தையால் கொடுக்க இயலாது என்று சொன்னதற்கு சரி உங்க அப்பாவிடம் ரூபாய்.5,000/-த்தையாவது வாங்கி வந்து கொடு என்று கூறினார். அதற்கு நான் பணத்தை எனது தந்தையிடம் வாங்கி வருவதாக கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு வந்து எனது தந்தையிடம் விஷயத்தை கூறினேன். அதற்கு அவர் லஞ்சம் கொடுத்து சேஞ்சு ஒயர் சுவிட்ச் அமைக்க எனக்கு விருப்பம் இல்லை. இது சம்மந்தமா லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்கலாம் என்று சொல்லி எனக்கு வயதாகிவிட்டதால் என்னால் புகார் கொடுத்து அலைய முடியாது நீயே பார்த்துக்கொள் என்று சொன்னார். எனக்கும் எனது தந்தைக்கும் லஞ்சம் கொடுத்து சேஞ்சு ஒயர் சுவிட்ச் அமைக்க விருப்பமில்லாததால் ரூபாய்.5000/- லஞ்சமாக கேட்கும் உதவி மின் செயற்பொறியாளர் திரு.ஜெகன்மோகன் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, (கையொப்பம்) சீ.அரவிந்தன் நாள்: 22.06.2023 இடம்:விழுப்புரம்.

Sir,

Received the above computer typed complaint on 22.06.2023 at about 17.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Viluppuram Vigilance and Anti-Corruption Cr.No.2/2023/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the

Prevention of Corruption (Amendment) Act 2018 at 07.00 hrs today on 23.06.2023 sd xxxxxx on 23.06.2023 (N.Eswari) Inspector of Police, V&AC, VPM).

The original FIR along with a the original computer typed complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Viluppuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.